திரு. எச். ஜீ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி இருக்கிறது. அங்கே சுற்றுலா துறை மூலமாகவும், தனியாகவும் பலதரப்பட்ட மக்கள் வந்து செல்கிறார்கள். அங்கே ஒரு மிருகக் காட்சிசாலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இருந்தும் அங்கே எந்தவிதமான மிருகமும் இல்லை. ஆகவே அதை விரிவுபடுத்துவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இதுபற்றித் தனியாக கேள்வி கேட்டால் பதில் சொல்ல இயலும்.

ஜெயங்கொண்டம் தொகுதியில் தொழிற்பேட்டை அமைத்தல்.

163—(*வினா எண் 9949)—டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் ஒரு தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சூனூர் பு. கோ. ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

2. அறிவிப்புகள்.

(அ) உறுப்பினர் திரு. ரா. சின்னச்சாமி கைது செய்யப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு தர்மபுரி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து 23–11–1986–ம் தேதியன்று கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றது:

" I have the honour to inform you that on 23rd November 1986 at 11.35 Hours, Thiru R. Chinnasamy, M.L.A., (D.M.K.) of Dharmapuri Assembly Constituency and 49 others assembled at the Bus Stand, Dharmapuri, as a protest against alleged imposition of Hindi, defying regulatory order under Section 30 (2) Police Act in force. After a brief address, they burnt the 17th Part of the (relevant portion of Official Languages) Constitution of India and caused insult to the honour of

the Constitution of India. They were arrested under section 143, 188 I.P.C., section 7(1)-A, Criminal Law Amendment Act and Section 2 of Prevention of Insult to National Honour Act, 1971. They were brought to the Dharmapuri Police Station at 11.50 hrs. A case in Dharmapuri Police Station Cr. No. 622 of 1986 was registered.

They were produced before Hon. Judicial First Class Magistrate and they were remanded for a period of 13 days up to 5th December 1986 and they are being taken to Central Prison, Salem ."

3. அரசியலமைப்புச் சட்டப் பிரிவை எரித்தோர் உறுப்பினர்கள் தகுதியை இழத்தல்— பேரவைத் தலைவர் தீர்ப்பு.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த அவையிலே கடந்த வெள்ளியன்று ஒரு முக்கியமான பிரச்னை குறித்து நான் தங்களிடம் விளக்கம் கோரினேன். இந்த அவையைச் சேர்ந்த மாண்புமிகு ஆறு உறுப்பினர்கள் அரசியல் சட்டத்தினுடைய அடிப்படையில் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டதற்குப் பிறகு, பொது இடங்களில் அரசியல் சட்டத்தின் பிரதிகளை எரித்த குற்றத்திற்காக கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தியைத் தாங்கள் அறிவித்ததைத் தொடர்ந்து அவர்கள் இந்த அவையில் உறுப்பினர்களாகத் தொடர்கிறார்களா, அவர்கள் தொடர்ந்து பணியாற்றுவதற்கு தாங்கள் அனுமதிக்கிறீர்களா என்ற விளக்கத்தை.... (கூச்சல் — குழப்பம்) நான் நீங்கள் கொடுத்த தீர்ப்பை ஏற்றுக் கொள்கிறேன். அந்தத் தீர்ப்பின் உள்ளே போக வில்லை. தாங்கள் அன்றைக்கு அளித்த பதிலை முழுமையானதாகவோ, என்னுடைய கேள்விக்கு ஏற்ற பதிலாகவோ, என்னுடைய கேள்விக்கு நேரிடையான பதிலாகவோ நான் கருதவில்லை. (கூச்சல்-குழப்பம்).

(முற்பகல் 10.00)

பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் அரசியல் சட்ட விளைவுகள் என்ன என்பதை உங்கள் மூலமாக நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இந்தப் பிரச்சனையைப் பற்றி அன்றைக்கே எழுப்பினீர்கள். அன்றைக்கே நாவலர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். நீங்கள் இப்போது மறுபடியும் இந்தப் பிரச்சனையை எழுப்பி இருக்கிறீர்கள். நான் இப்போது சொல்லக்கூடியது என்னவென்றால், அதாவது burning of the Constitution by Members of this House is unbecoming, uncalled for and unconstitutional. அந்த லைனில் I have a ruling for that.